பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

19 07 2025 **SATURDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நான்கு ஐரோப்பிய நாடுகள் உடனான தாராள வர்த்தக ஒப்பந்தம் வரும் அக்டோபர் ஒன்றாம் தேதி அமலுக்கு வரும் என்று மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

2. தெலங்கானா மாநிலம் காசிபெட்டில் அமைக்கப்பட்டுவரும் ரயில்வே தளவாட தொழிற்சாலை அடுத்த ஆண்டு தனது உற்பத்தியை தொடங்கும் என்று ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

3. போதைப்பழக்கத்திற்கு எதிரான இயக்கத்தில் இளைஞர்கள் பங்குபெற அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.

4. தெற்கு சீனாவில் கடுமையான சூறாவளி காற்று வீசக்கூடும் என்று அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

5. ஆசிய இளையோர் ஓபன் ஜூடோ போட்டியில், இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

--இனி விரிவான செய்திகள்---

**<<<<<<>>>>>>**

நாட்டு நலனுக்கு உகந்த வகையில் அமையும் சர்வதேச வர்த்தக ஒப்பந்தங்களுக்கு மட்டுமே இந்தியா ஒப்புதல் அளித்து வருவதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

மும்பையில் இன்று **Assocham** வர்த்தக கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் பேசிய அவர், வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை எட்டுவதற்கு மட்டுமே முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இந்தியாவில் சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு தற்போது மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

சிறு தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு தேவையான உதவிகளை அரசு செய்து வருவதாக கூறிய அவர், உள்நாட்டு உற்பத்திக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் அரசு செயல்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்துறையை வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்வதற்கான ஆராய்ச்சிப்பணிகள், புதுமை கண்டுபிடிப்புகள், உலகத்தரம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

இந்தியாவுக்கும், நான்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையே கையெழுத்தாகியுள்ள தாராள வர்த்தக ஒப்பந்தம், இவ்வாண்டு அக்டோபர் ஒன்றாம் தேதி நடைமுறைக்கு வரும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் 10-ஆம் தேதியன்று ஐஸ்லாந்து, நார்வே, சுவிட்சர்லாந்து, **Liechtenstein** ஆகிய நான்கு ஐரோப்பிய நாடுகளுக்கும், இந்தியாவுக்கும் இடையே இந்த ஒப்பந்தம் கையெழுத்தானதாகவும் அவர் குறிப்பிட்டார்.

100 பில்லியன் டாலர் அளவுக்கு முதலீடு செய்ய இந்த நாடுகள் முன்வந்துள்ளதாகவும், முதல் பத்தாண்டுகளில் 50 பில்லியன் டாலர் முதலீடு செய்ய இருப்பதாகவும் திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

**<<<<<<>>>>>>**

நாட்டின் சிறிய மாநிலங்கள் வளர்ச்சி பெற்றால்தான் நாடு முழுமையான வளர்ச்சியை எட்ட முடியும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

உத்தராகண்ட் மாநிலம் ருத்ராபூரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முதலீட்டு திருவிழா 2025-ல் நாடு முழுவதிலும் உள்ள தொழில் முனைவோர் மற்றும் முதலீட்டாளர்கள் இடையே கலந்துரையாடிய அவர்,

நாட்டில் உள்ள சிறிய மாநிலங்கள் குறிப்பாக வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சியில் மத்திய அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருவதாகவும் கூறினார்.

தொழில் வளர்ச்சிக்கும், சுற்றுச்சூழலுக்கும் இடையிலான சமநிலையை பராமரித்து, தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இன்றைய முதலீட்டுத் திருவிழாவில் உத்தராகண்ட் மாநிலம் ஒரு லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகளை பெற்றுள்ளதாகவும், இதனால் 81 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தெலங்கானா மாநிலம் காசிபெட்டில் அமைக்கப்பட்டுவரும் ரயில்வே தளவாட தொழிற்சாலை அடுத்த ஆண்டு தனது உற்பத்தியை தொடங்கும் என்று ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டியுடன் இன்று இந்த தொழிற்சாலையின் கட்டுமானப்பணிகளை ஆய்வு செய்த திரு அஷ்வினி வைஷ்ணவ், அனைத்து கட்டுமானப்பணிகளும் நடப்பாண்டில் நிறைவுபெற்றுவிடும் என்று கூறினார்.

இந்த தொழிற்சாலை மூலம் ரயில் என்ஜின்கள், ரயில் பெட்டிகள், சரக்கு வேஹன்கள், மெட்ரோ ரயில் பெட்டிகள் ஆகியவற்றின் உற்பத்தி படிப்படியாக தொடங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

காசிபெட் ரயில் தளவாட தொழிற்சாலை நாட்டிலேயே மிக முக்கியமான ஒன்றாக திகழும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ரயில்வே கட்டமைப்பை மேம்படுத்தி நாட்டை பொருளாதார வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்வதில் காசிபெட் தொழிற்சாலை முக்கிய பங்கு வகிக்கும் என்றும் அவர் கூறினார்.

தெலங்கானா மாநிலத்திற்கான ரயில்வேத் திட்டங்கள் பிரதமர் திரு நரேந்திர மோடியின் அறிவுறுத்தலின்பேரில் சிறப்பாக நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

காசிபெட்டில் ரயில்பெட்டி தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டும் என்ற பிரதமரின் நீண்டநாள் கனவு நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்கும் முயற்சியில் போதைப்பழக்கம் இல்லாத இளைஞர்களின் பங்களிப்பு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் வாரணாசியில் இன்று இளையோர் ஆன்மிக மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், போதைப்பழக்கத்திற்கு எதிரான இயக்கத்தில் நாட்டு மக்கள் கலந்துகொண்டு வலிமையான பாரதத்தை உருவாக்க உதவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

நாம் ஒவ்வொருவரும் குறைந்தது ஐந்து இளைஞர்களை போதைப்பழக்கத்திற்கு எதிரான இயக்கத்தில் முன்நின்று செயல்படுத்துவதை ஊக்கப்படுத்த வேண்டும் என்றும் டாக்டர் மன்சுக் மாண்டவியா கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமயமாக்கல் துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார், போதைப்பழக்கத்திற்கு அடிமையானவர்களை மீட்டெடுப்பதற்கு மத்திய அரசு பல திட்டங்களையும், முயற்சிகளையும் எடுத்து வருவதாக கூறினார்.

உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த ராய் பேசுகையில், இன்றைய இளையோர் ஆன்மிக மாநாட்டில் 500-க்கும் மேற்பட்ட இளையோர் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளதாக தெரிவித்தார்.

இளைஞர்கள் ஆன்மிகத்திற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியதன் அவசியத்தை இம்மாநாடு உணர்த்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

<<<<<<>>>>>>

இந்நிலையில், இளையோர் ஆன்மிக மாநாடு குறித்து மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா எழுதிய கட்டுரை, இளைய சமுதாயத்தினருக்கு பெரிதும் உதவும் வகையில் அமைந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

போதையில்லா இந்தியாவை உருவாக்கும் நோக்கில் நடைபெறும் இந்த மாநாடு குறித்து திரு மாண்டவியா தெளிவான விளக்கங்களை தமது கட்டுரையில் குறிப்பிட்டிருப்பதாகவும் பிரதமர் தமது சமூக வலைதள பதிவில் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

மத்திய அரசின் செல்வமகள் சேமிப்புத் திட்டம் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

தமிழகத்தின் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் இத்திட்டத்தின்கீழ், தாங்கள் சேமிக்கும் பணம் தங்கள் குழந்தைகளின் எதிர்காலத்திற்கு பெரிதும் உதவிகரமாக இருக்கும் என்று பயனாளிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

<<<<<<>>>>>>

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் தொடங்கவுள்ள நிலையில், **INDI** கூட்டணி கட்சிகளுக்கு இடையே கருத்து மோதலும், பிரிவினைகளும் ஏற்பட்டுள்ளதாக பிஜேபி தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் திரு சுதான்ஷு திரிவேதி, ஆம் ஆத்மி கட்சி இக்கூட்டணியில் நீடிக்கவில்லை என ஏற்கனவே அறிவித்துவிட்டதாகவும் கூறினார்.

வரும் நாடாளுமன்ற கூட்டத்தொடரில் எதிர்க்கட்சியினர் ஆக்கப்பூர்வமாக பங்கேற்று, நேர்மறையான எண்ணத்துடன் செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி, தமது சகோதரியின் கணவர் திரு ராபர்ட் வதேரா மீது அமலாக்க இயக்குனரகம் தாக்கல் செய்துள்ள குற்றப்பத்திரிகை தொடர்பாக சமூக வலைதளத்தில் கருத்து தெரிவித்திருப்பது தேவையற்றது என்று கூறியுள்ளார்.

திரு ராகுல்காந்தி தமது கருத்தை எதிர்க்கட்சித்தலைவர் என்ற முறையில், பதிவிட்டுள்ளாரா என்பதை தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தங்களது குடும்பத்தினர் செய்யும் தவறுகளை தமது கட்சி செல்வாக்கை பயன்படுத்தி, மூடி மறைக்கும் முயற்சியில் திரு ராகுல்காந்தி ஈடுபட்டுள்ளதாகவும், பிஜேபி செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

தெற்கு சீனாவின் **'Hainan '** மற்றும் **'Guanggong** மாகாணங்களில் கடுமையான சூறாவளி காற்று வீசக்கூடும் என்று அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

**'Wipha** சூறாவளி புயல் **'Wenchang** நகரத்திற்கு கிழக்கே தென்சீன கடல் பகுதியில் மையம் கொண்டுள்ளது. இந்த சூறாவளி காற்று நாளை முதல் இந்த மாகாணங்களில் வீசக்கூடும் என்றும், இதனால் சூறாவளி காற்றுடன் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இன்று தொடங்கி, வரும் 22-ஆம் தேதிவரை **Wipha** சூறாவளி புயலின் தாக்கம் இருக்கும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

உத்தரப்பிரதேசத்தில் நேரிட்ட இருவேறு சாலை விபத்துகளில் 6 பேர் உயிரிழந்தனர், 19 பேர் காயமடைந்தனர்.

யமுனா விரைவுச்சாலையில் மினி வேன், லாரியுடன் மோதியதில் 6 பேர் உயிரிழந்ததாகவும், 2 பேர் காயமடைந்ததாகவும் காவல் துறையினர் தெரிவித்தனர்.

இந்த வழித்தடத்தில் தனியார் பேருந்து நிலை தடுமாறி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 17 பேர் காயமடைந்தனர்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய இளையோர் ஓபன் ஜூடோ போட்டியில், இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

ஹாங்காங்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 90 கிலோ பிரிவில் இந்தியாவின் **Babnoor Brar** இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

--------------

16 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய வாலிபால் சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

தாய்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியின் வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியா 3-2 என்ற புள்ளிக்கணக்கில் ஜப்பானை வென்றது.

-----------

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Dhakshineswar Suresh** – அமெரிக்காவின் **Nicolas Kotzen** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-0, 6-2 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **Eric Perkowski -** இந்தியாவின் **Saheb Sodhi** இணையை வென்றது.

<<<<<<>>>>>>